தலைப்பு 301 – கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

தலைப்பு 301 - கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 ஆகஸ்ட் 13 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

2 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் ஒத்திருந்தன.

(ஆ) கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3 நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
06 செலவின விடயங்களுக்காக திருத்தப்பட்ட வரவுசெலவு ஒதுக்கீடுகளில் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான சேமிப்புக்கள் காணப்படுகின்றமையினால், நிதி பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகள் இயன்றவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	இயன்றவரை யதார்த்தமான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.	இயன்றவரை சரியாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	3 செலவின விடயங்களுக்கு தொடர்புடைய மொத்தமாக ரூபா 640,451 பெறுமதியான பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	பொறுப்புக்கள் குறிப்பாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.	பொறுப்புக்கள் சரியாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	3 செலவின விடயங்களின் ஒதுக்கீட்டு சேமிப்பின் மொத்தம் ரூபா 204,413 ஆக இருந்தபோதிலும், பொறுப்புக்களின் மொத்தம் ரூபா 852,184 ஆக இருந்தமையினால், ஒதுக்கீடுகளை மிகைத்து பொறுப்புக்களுக்குட்பட்ட தொகை ரூபா 647,771 ஆக இருந்தது.	யதார்த்தமான முறையில் மதிப்பீடுகளைத் தயாரிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.	யதார்த்தமாகவும் சரியாகவும் மதிப்பீடுகளைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 அமைச்சினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட நிதியேற்பாட்டு பயன்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
உணவுப் பாதுகாப்பு மற்றும் முட்டைத் தட்டுப்பாட்டிற்குத் தீர்வாக, ஒரு நாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளை மாவட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட முட்டை உற்பத்தியாளர்களுக்கு வழங்கி, முட்டை உற்பத்தியில் ஈடுபடும் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களை வலுவூட்டும் செயற்திட்டத்திற்காக 2024 ஏப்ரல் 09 ஆம் திகதி வர்த்தக, வாணிபம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சினால் திணைக்களத்திற்கு ரூபா 50 மில்லியன் வழங்கப்பட்டிருந்த நிலையில், குறித்த செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.		

(அ)	திணைக்களத்தினால் பெறுகை செயல்முறை பின்பற்றப்பட்டு வழங்குனர்கள் தெரிவு செய்வதற்கு பதிலாக முழுமையான பெறுகை செயன்முறையின் பொறுப்பு கால்நடை உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்பான திணைக்களத்தின் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கமொன்றிற்கு கையளித்திருந்தமை, சங்கத்தினால் அதற்கு அருகாண்மையிலுள்ள வழங்குனர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தமை, தகைமையற்ற வழங்குனர்களை தெரிவு செய்தல் மற்றும் கோழி குஞ்சுகள் உரிய வயதில் மற்றும் எடையில் உள்ளமை மற்றும் கோழி குஞ்சுகள் உரிய விகிதத்தில் வழங்கப்படுகின்றமை பிரதேச கால்நடை வைத்தியரொருவரினால் உறுதிசெய்யப்பட்டிராமையின் போன்ற காரணங்களால் பெறுகை நடவடிக்கைகள் முறையான வண்ணம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை . மேலும் கோழி குஞ்சிடமிருந்து ரூபா 50 உம், பன்றி குட்டியொன்றிடமிருந்து ரூபா 500 உம் ஆக மொத்தம் ரூபா 4,126,500 சங்கத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.	பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.	முறையான பெறுகை செயல்முறையின் ஊடாக செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தி இலக்குகளை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற போதிலும், அவ்வாறு செய்யாமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரைத் தீர்மானிப்பது உள்ளக விசாரணையொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	"மாவட்ட மட்டத்தில் முட்டை உற்பத்தியில் ஈடுபடும் சிறு மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டல்" என்பதே செயற்திட்டத்தின் நோக்கமாக இருந்தபோதிலும், 2023 ஆம் ஆண்டில் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்பட்ட கம்பஹா மாவட்டத்தின் 05 பிரதேச செயலகப் பிரிவுகள் உட்பட 7 பிரதேச செயலகப் பிரிவுகளில் மாத்திரம் மீளாய்வாண்டிலும் 76,140 குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டிருந்தமையின	பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.	செயற்திட்ட நோக்கத்திற்கு மாறாகச் செயற்பட்ட தரப்பினரை இனங்காண்பதற்காக உள்ளக விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும்.

	ால் செயற்திட்டத்தின் நோக்கம் பூர்த்தி செய்யப்படவில்லை. மேலும், செயற்திட்டத்தின் நோக்கத்திற்கு மாறாக, ரூபா 10,224,000 செலவில் 639 பன்றிக் குட்டிகள் முறையான அங்கீகாரமின்றி கொள்வனவு செய்யப்பட்டு 320 பயனாளிகளிடையே விநியோகிக்கப்பட்டிருந்தன.		
(இ)	2 வார வயதுடைய 9160 கோழிக்குஞ்சுகளை ரூபா 450 வீதம் கொள்வனவு செய்ய இணக்கம் காணப்பட்டிருந்த போதிலும், உரியவாறு கோழிக்குஞ்சுகளை விநியோகிக்க முடியாமையினால் இரண்டு நாட்கள் விநியோகஸ்தர் வசம் விலங்குகளைத் தடுத்து வைத்து உணவு வழங்க நேரிட்டதால், 3 வார கோழிக்குஞ்சுகளின் பெறுமதியான ரூபா 600 வீதம் 9160 கோழிக்குஞ்சுகளுக்காகச் செலுத்த நேரிட்டமையினால் ரூபா 1,374,000 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.	பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.	வழங்கல் தொடர்பில் முறையான ஒப்பந்தம் செய்துகொள்ள நடவடிக்கை எடுக்காமை குறித்துப் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட வேண்டும்.
(ஈ)	செயற்திட்டப் பயனாளிகளின் கையொப்பமிடப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகளுக்குப் பதிலாக சங்கத்தினால் சான்றுப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாவணங்களில் பிரதேச செயலாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பயனாளிகளினால் கையொப்பமிடப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. 74,956 கோழிக்குஞ்சுகளைப் பொறுப்பேற்றமைக்கான பயனாளிகளின் கையொப்பமிடப்பட்ட ஆவணங்களின் பிரதிகள் மாத்திரமே காணப்பட்டதோடு, 1,184 குஞ்சுகள் பொறுப்பேற்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், விநியோகிக்கப்பட்ட	பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.	செயற்திட்டத்தின் பின்தொடர் அறிக்கைகள் தாமதமின்றிப் பெறப்பட வேண்டும். முறையான மேற்பார்வை மற்றும் பின்தொடர் முறைமையுடன் இவ்வாறான செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

கோழிகள் மற்றும் பன்றிக் குட்டிகள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் குறித்த அறிக்கைகள் 2025 செப்தெம்பர் 15 ஆம் திகதி வரையில் பெறப்பட்டிராததுடன் இதன்காரணமாக செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடையப்பட்டமை தொடர்பான பங்களிப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாமல் இருந்தது.

3.4 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோரினால் வருடாந்த மற்றும் ஏனைய நிதிக் கூற்றுக்கள் தேவையான காலப்பகுதிக்குள் தயாரிக்கப்படுவதை சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன், கணக்காய்வு செய்யப்படும் நிறுவகத்திற்குரிய வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பேற்க வேண்டும் என்ற போதிலும், அறிக்கையின் 3.2 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள் காரணமாக அவ்வத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.	விரைவாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆண்டறிக்கைகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஆ)	உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை உரியவாறு நடைமுறைப்படுத்துவதற்கு வினைத்திறனான முறைமையொன்று உள்ளதென பிரதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் ஆகியோர் உறுதிப்படுத்த வேண்டும் என்ற போதிலும், அறிக்கையின் 4.1 பந்தியில்	பொது நிர்வாக அமைச்சிற்கு misco முறைமை மூலமாகவும் எழுத்து மூலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதோடு, வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்றை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுப்பேன்.	உள்ளக கணக்காய்வு செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களின் பிரகாரம் அத்தேவையானது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

4 செயற்பாட்டு மீளாய்வு

4.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
திணைக்களத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் அபிவிருத்திப் பிரிவின் 6 செயற்திட்டங்களுக்காக ரூபா 25 மில்லியன் ஒதுக்கீடுகள் மீளாய்வாண்டினுள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	திணைக்கள மறுசீரமைப்பானது அமைச்சின் தீர்மானத்தின் அடிப்படையில் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படவில்லை.	அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்காக நடைமுறை நிலமையைக் கருத்திற்கொண்டு நிதியேற்பாடு ஒதுக்கப்படல் வேண்டும்.

4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் 47(4) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு நிறைவடைந்து 180 நாட்களுக்குள் அல்லது அதற்கு முன்னர் வெளியிடப்பட வேண்டிய போதிலும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டிடுகளின் வருடாந்த செயலாற்றல் 2025 செப்தெம்பர் 15 ஆம் திகதி வரையிலும் பராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	செயலாற்றல் அறிக்கை விரைவாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான செயலாற்றல் அறிக்கைகள் உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னதாகவே அந்தப் பணி நிறைவேற்றப்பட வேண்டும்.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
இயங்கு நிலையில் உள்ள 7 வாகனங்கள் மற்றும் 02 மோட்டார் சைக்கிள்கள் திணைக்களத்திடம் காணப்பட்ட போதிலும், அங்கீகரிக்கப்பட்ட 5 சாரதி பதவிகளில் 4 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டமையினால் அவ்வாகனங்கள் பயன்பாட்டிற்குட்படுத்தப்படாமல் காணப்பட்டன.	வெற்றிடங்கள் குறித்து **misco** முறைமை நாளதுவைரயாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	தேவைக்கேற்ப வாகனங்களைப் பயன்படுத்தக்கூடிய வாறு சாரதி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.4 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதி பிரமாணம் 880 மற்றும் 612 ஆம் அதிகாரமான அரசாங்கப் பிணை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை கோரப்பட வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு, அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தொடர்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புக்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பேன்.	பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு பிணை வைப்புக்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.5 முகாமைத்துவ நலிவுகள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2023 மே 16 ஆம் திகதி சேவையை விட்டு விலகிய உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 203,775 ஆக இருந்த கடன் மீதியொன்று மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.	அனர்த்தக் கடன் மீதியானது பிணையாளர்களிடமிருந்து அறவிடப்பட்டு வருகின்றது.	அறவிட வேண்டிய கடன் மீதிகள் மற்றும் வட்டி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

5 நல்லாளுகை

5.1 உள்ளகக் கணக்காய்வு

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உள்ளகக் கணக்காய்வாளரொருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வெற்றிடம் சம்பந்தமாக பொது நிர்வாக அமைச்சிற்கு misco முறைமை மூலமாகவும் எழுத்து மூலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	உள்ளகக் கணக்காய்வாளரொருவரை நியமிப்பதற்கும் உள்ளகக் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்..

6 மனித வள முகாமைத்துவம்.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 147 ஆகவும், உள்ளவாரான ஊழியர் எண்ணிக்கை 80 ஆகவும் காணப்பட்டமையினால் 67 வெற்றிடங்கள் காணப்பட்டன.	பதவி வெற்றிடங்கள் சம்பந்தமாக பொது நிர்வாக அமைச்சிற்கு misco முறைமை மூலமாகவும் எழுத்து மூலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	அத்தியாவசிய பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	கூட்டுறவு மேம்பாட்டு உத்தியோகத்தர் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் 62 இல் 26 வெற்றிடமாகக் காணப்பட்டமை, பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களின் செயற்பாடுகளை வினைத்திறனாக முன்னெடுத்துச் செல்வதற்குப் பாதகமாகப் பாதித்திருந்தது..	கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அரசாங்கத்தின் கொள்கை ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில் பெறப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய அத்தகைய ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டதாகவும், பதவியணி மீளாய்வின் பின்னர் பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும்.	அத்தியாவசிய பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.